NOOLAHAM FOUNDATION

**நூலக நிறுவனம்**
**மாதாந்த அறிக்கை – ஏப்ரல் 2017**

**வணக்கம்**

நூலக நிறுவனத்தின் 2017 ஏப்ரல் மாத ஆவணமாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்சியடைகின்றோம்.

**எண்ணிம ஆவணவாக்கம்** (Digital Preservation)

| **வகை** | **எண்ணிக்கை** | **பக்கங்கள்** |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 357 | 22102 |
| பக்கம் தவறியவை | 13 | 1498 |
| தரமேம்படுத்தல் | 56 | 2968 |
| பக்கம் சிதைந்தவை | 06 | 136 |
| மொத்தம் | 441 | 26998 |

**எண்ணிம நூலகம்** (Digital Library)

- கொக்குவில் அலுவலக கிளையில் இம்மாதம் 164 ஆவணங்களின் 14838 பக்கங்கள் மின்வருடப்பட்டன.
- யாழ்ப்பாண பொது நூலகத்தில் 232 பத்திரிகைகளின் 4926 பக்கங்கள் மின்வருடப்பட்டன.
- ஏழாலை களச்செயற்பாட்டில் 46 ஆவணங்களின் 7286 பக்கங்கள் மின்வருடப்பட்டன.
- 09 ஆவணங்கள் 294 பக்கங்கள் ஏற்கனவே மின்வருடப்பட்ட பிரதிகளாக இனங்காணப்பட்டுள்ளது. எனினும் இவை வெவ்வேறு சேகரிப்புக்களில் இருந்து பெறப்பட்டவை என்ற காரணத்தினால் மின்வருடப்படுகின்றது. ஆயினும் மேலுள்ள அட்டவணயில் இந்த எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை
- 400 ஆவணங்களுக்கான பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.
- 82 தரமேம்படுத்தல் ஆவணங்களுக்கு கட்டுரை நிர்வாகத்தரவு இணைக்கப்பட்டுள்ளது.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

- சேகர அபிவிருத்தியில் எழுத்தாளர், பதிப்பாளர்களான இராஜேஸ்வரி, க.சவுந்தரராஜன், க. குகனேந்திரன், சின்மயாமிஷன், சி. என். எச். சாள்ஸ், அ.யேசுராசா சாந்தன் ஐயாத்துரை, க. நவம், மயிலங்கூடலூர் பி. நடராசா, சன்மார்க்கசபை ஆகியோரது சேகரிப்புக்களும் வெளியீடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் அவர்களில் சிலரது சேகரிப்புக்கள் மின்வருடப்படவுள்ளன. ஆவணங்களை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

- ஏப்ரல் மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.

வெளியீட்டாளர்கள்

★ ஆதவன் எழுகிறான்.

எழுத்தாளர்கள்

★ சியாமளா நவரட்ணம்

**காப்புப்படி (Backup)**

- 32501-34700 வரையான ஆவணங்கள் அனைத்தும் வன்தட்டுக்களில் காப்புப்படி எடுக்கப்பட்டுள்ளது.

**ஆவணகம் வலைத்தளம் (aavanaham.org)**

ஆவணகம் (aavanaham.org) வலைத்தளத்தில் கீழ்வரும் விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

| **வகை** | **எண்ணிக்கை** |
|---|---|
| நூற்பட்டியல் | 707 |
| ஒலிச்சேகரம் | 08 |
| படங்கள் சேகரம் | 94 |

**பயனர் சேவை (User Service)**

- எண்ணிம நூலக வலைத்தளத்தில் (www.noolaham.org) இம்மாதம் 17,271 பயனர்களால் 202,109 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 53% புது வாசகர்களும் 47% ஏற்கனவே உள்ள வாசகர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

- ஆவணக வலைத்தளத்தில் (aavanaham.org) இம்மாதம் 736 பயனர்களால் 4,421 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 76.7% புது பயனாளர்களும் 23.3% ஏற்கனவே உள்ள பயனாளர்களும் பயன்படுத்தியுள்ளனர்.
- இம்மாதம் உசாத்துணைப்பகுதியினூடாக மூன்று வாசகர்கள் ஆவணங்கள் கோரியிருந்தனர். இருவருக்கு உதவக் கூடியதாக இருந்தது.

## வழிகாட்டுநர் சபை (Regulatory Board)

இம்மாதம் இரண்டு கூட்டங்கள் இடம்பெறுவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டன. இதனுடன் ஏப்ரல் 16ம் திகதி சிறப்புக் கூட்டம் ஒன்றும் கூட்டப்பட்டது. அதற்கான இணைப்புக்கள்

- ஏப்ரல் 09, 2017 https://github.com/noolahamfoundation/governance/wiki/RB-Meeting-April-09,-2017
- ஏப்ரல் 16, 2017 https://github.com/noolahamfoundation/governance/wiki/RB-Meeting-April-16,-2017-(Special-Meeting---APB-2017)
- ஏப்ரல் 23, 2017 https://github.com/noolahamfoundation/governance/wiki/RB-Meeting-April-23,-2017

## வரவு செலவு அறிக்கை (Financial Statement)

- ஏப்ரல் மாதத் தேவைகளுக்காக ரூ. 264,212.07 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் ரூ. 189,375.00, வாடகை ரூ. 30,000.00, தொலைபேசி மற்றும் இணையம் 10,400.62 மின்சாரம் 7,780.45 மற்றும் ஏனைய செலவுகளும் உள்ளடங்குகின்றன.

- ஏப்ரல் மாதம் அவுஸ்ரேலியா அன்பர்கள் ஊடாக ரூ. 70,000.00 சுவிஸ்லாந்து அன்பர்கள் ஊடாக ரூ. 103,186.85 ரூபாவும் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றது.

- இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகின்றது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி